நீண்ட கால பயிற்சியாளரை பிரிந்தார் அல்காரஸ்

பார்சிலோனா: டென்னிஸ் உலகில் நம்பர் 1 வீரராக திகழும், ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸ் (22), கடந்த 6 ஆண்டுகளாக தனக்கு பயிற்சி அளித்து வந்த பயிற்சியாளர் ஜுவான் கார்லோஸ் பெரெரோ உடனான ஒப்பந்தத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்துள்ளார். அல்காரஸ், தனது 16வது வயதில் இருந்து ஜுவானிடம் பெற்ற பயிற்சிகள் காரணமாக, 6 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சாம்பியன் ஆகி சாதனை படைத்தார். 8 மாஸ்டர்ஸ் 1000 போட்டிகள் உட்பட 24 போட்டிகளில் அல்காரஸ் சாம்பியன் ஆகி, கடந்த 2022ல் தனது 19வது வயதில் உலகின் நம்பர் 1 வீரராக உருவெடுத்து சாதனை படைத்தார்.

டைகர்ஸ் ஆப் பெங்கால் அணியை வாங்கிய கங்குலி

கொல்கத்தா: இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி, இந்தியன் ஸ்ட்ரீட் பிரீமியர் லீக் (ஐஎஸ்பிஎல்) போட்டிகளில் ஆடும் அணிகளில் ஒன்றான டைகர்ஸ் ஆப் பெங்காலின் இணை உரிமையாளராக சேர்ந்துள்ளார். ஐஎஸ்பிஎல் போட்டிகள், வரும் 2026ம் ஆண்டு, ஜனவரி 9ம் தேதி துவங்கி, பிப்ரவரி 6ம் தேதி வரை நடைபெற உள்ளன. டென்னிஸ் பந்துகளை கொண்டு ஆடப்படும் இந்த கிரிக்கெட் போட்டிகள், தலா 10 ஓவர்களை கொண்ட, டி10 போட்டிகளாக இருக்கும்.

டெவான் கான்வே 178 ரன் நாட்அவுட்

மவுங்கானுய்: நியூசிலாந்தின் மவுங்கானுய் நகரில், நியூசிலாந்து-வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையே, 3வது டெஸ்ட் போட்டி நேற்று துவங்கியது. முதலில் களமிறங்கிய துவக்க வீரர்கள் கேப்டன் டாம் லாதம், டெவான் கான்வே, பொறுப்புடனும், நிதானத்துடனும் ஆடி ரன்களை குவித்தனர். இந்த இணை 323 ரன்கள் குவித்திருந்த நிலையில், டாம் லாதம் 137 ரன்னில் ஆட்டமிழந்தார். டெவான் கான்வே தொடர்ந்து சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல், 25 பவுண்டரிகளுடன் 178 ரன் விளாசினார். நேற்றைய ஆட்ட நேர முடிவில் நியூசி. ஒரு விக்கெட் இழப்புக்கு 334 ரன் எடுத்திருந்தது. இன்று, 2ம் நாள் ஆட்டம் தொடர்கிறது.

ஆஷஸ் 3வது டெஸ்ட்

துல்லிய பந்துகளில் விக்கெட் அள்ளிய ஆஸி வீரர்கள்

அடிலெய்ட், டிச. 19: ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான 3வது டெஸ்ட் போட்டியில் நேற்று, இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 213 ரன் எடுத்து திணறி வருகிறது.

இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் ஆடி வருகிறது. ஏற்கனவே முடிந்த 2 டெஸ்ட் போட்டிகளிலும் ஆஸி, அபார வெற்றி பெற்று, 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், இந்த அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி அடிலெய்ட் நகரில் கடந்த 17ம் தேதி துவங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 326 ரன் குவித்து வலுவான நிலையில் இருந்தது.

இந்நிலையில், 2ம் நாளான நேற்று ஆஸி அணியின் முதல் இன்னிங்சை தொடர்ந்த மிட்செல் ஸ்டார்க் 54 ரன் எடுத்து ஆட்டமிழந்தார். கடைசி விக்கெட்டாக, நாதன் லியான் 9 ரன்னில் வீழ்ந்தார். அதனால், 91.2 ஓவரில் ஆஸ்திரேலியா 371 ரன்னுக்கு ஆல்அவுட்டானது. அதன் பின், முதல் இன்னிங்சை துவக்கிய இங்கிலாந்து வீரர்கள் வழக்கம் போல மீண்டும் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

துவக்க வீரர் ஜாக் கிராவ்லி 9 ரன்னில் வெளியேற, அடுத்து வந்த ஒல்லி போப் 3 ரன்னில் அவுட்டானார். பின் வந்த வீரர்களில் ஹேரி புரூக் 45, கேப்டன் பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் 45 ரன் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் வீழ்ந்ததால், இங்கிலாந்து அணி பரிதாபமாக காட்சி அளித்தது. நேற்றைய ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து 8 விக்கெட் இழப்புக்கு 213 ரன் எடுத்திருந்தது. பென் ஸ்டோக்ஸ் 45, ஜோப்ரா ஆர்ச்சர் 30 ரன்னுடன் களத்தில் இருந்தனர். ஆஸி தரப்பில் கேப்டன் பேட் கம்மின்ஸ் 3, ஸ்காட் போலண்ட், நாதன் லியான் தலா 2, கேமரூன் கிரீன் 1 விக்கெட்டுகளை சாய்த்தனர். இன்று 3ம் நாள் ஆட்டம் தொடர்கிறது.

தென் ஆப்ரிக்காவுடன் 5வது டி20

தொடரை கைப்பற்றுமா இந்தியா?

அகமதாபாத், டிச. 19: இந்தியா - தென் ஆப்ரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையிலான 5வது டி20 போட்டி இன்று, அகமதாபாத் நகரில் நடைபெற உள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள தென் ஆப்ரிக்கா கிரிக்கெட் அணி 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதுவரை நடந்த 4 போட்டிகளில் இந்தியா 2ல் வென்று, 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற இருந்த 4வது போட்டி கடும் பனிமூட்டம் காரணமாக கைவிடப்பட்டது. இந்நிலையில், இந்த அணிகள் இடையிலான கடைசி மற்றும் 5வது டி20 போட்டி இன்று, குஜராத்தின் அகமதாபாத் நகரில் நடைபெற உள்ளது. இன்றைய போட்டியில் இந்தியா வென்றால் தொடரை கைப்பற்ற வழிவகுக்கும். தென் ஆப்ரிக்கா வெற்றி பெற்றால், தொடர் சமன் ஆகும். எனவே, இரு அணிகளுக்கும் இந்த போட்டி அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்கிறது. இந்திய அணி கேப்டன் சூர்யகுமார் யாதவ், டி20 போட்டிகளில் விளாசி ஆடக்கூடியவர் என்பதால் தொடர்ந்து அணியில் இடம்பெற்று வருகிறார். இருப்பினும், சமீபத்திய போட்டிகளில் தொடர்ந்து மோசமாக ஆடி விக்கெட்டுகளை இழந்து வருவதால், தொடர்ந்து பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறார். எனவே, இன்றைய போட்டியில் சூர்யகுமார் தனது வழக்கமான அதிரடி ஆட்டத்தை அரங்கேற்றி அணிக்கு வெற்றி தேடித் தருவார் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். நடப்பாண்டில், சூர்யகுமார் தலைமையில் இந்திய அணி மோதிய 20 போட்டிகளில் 18ல் அபார வெற்றி பெற்றுள்ளபோதும், இப்போட்டிகளில் அவர் ஒரு முறை கூட அரைசதம் அடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், சுப்மன் கில்லின் பேட்டிங்கும் இந்திய அணிக்கு கவலை அளிப்பதாக உள்ளது. அவரது கால் பெருவிரலில் காயம் ஏற்பட்டுள்ளதால், இன்றைய போட்டியில் கில் ஆடுவது சந்தேகமே. இவர்களை தவிர, ஹர்திக் பாண்ட்யா, சிவம் தூபே உள்ளிட்ட வீரர்கள் சிறப்பாக ஆடி வருவதால், இந்திய அணி வெற்றிப் பாதையில் தொடர்ந்து பயணித்து வருகிறது. பந்து வீச்சில், அர்ஷ்தீப் சிங், ஹர்சித் ராணா, வருண் சக்ரவர்த்தி சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

தென் ஆப்ரிக்கா அணியை பொறுத்தவரை, டெஸ்ட் போட்டிகளில் அதகளப்படுத்தி வந்தாலும், டி20 போட்டிகள், சிம்ம சொப்பனமாகவே திகழ்கின்றன. இன்றைய போட்டியில், தென் ஆப்ரிக்கா அணியின் டாப் ஆர்டர் பேட்ஸ்மேனாக, அய்டன் மார்க்ரம் களமிறங்க வாய்ப்புள்ளது. அந்த அணியின் இளம் வீரர் டெவால்ட் புரூவிஸ் ஃபார்முக்கு திரும்பினால், அணியின் பேட்டிங் லைன் வலிமை பெறும்.

சையத் முஷ்டாக் கோப்பை டி20

ஜார்க்கண்ட் சாம்பியன்

புனே, டிச. 19: உள்நாட்டு அணிகள் மோதும் சையத் முஷ்டாக் அலி கோப்பை டி20 போட்டிகளின் இறுதிப் போட்டி, புனே நகரில் நேற்று நடந்தது. இதில், ஜார்க்கண்ட் - அரியானா அணிகள் மோதின. முதலில் களமிறங்கிய ஜார்க்கண்ட் அணியின் துவக்க வீரர் கேப்டன் இஷான் கிஷண், 49 பந்துகளில் 10 சிக்சர், 6 பவுண்டரிகளுடன் 101 ரன் குவித்தார். பின் வந்த குமார் குஷாக்ரா 38 பந்துகளில் 81, அனுகுல் ராய் ஆட்டமிழக்காமல், 20 பந்துகளில் 40 ரன்கள் வெளுத்தனர். 20 ஓவரில் அந்த அணி 3 விக்கெட் இழப்புக்கு 262 ரன் குவித்தது.

அதையடுத்து, 263 ரன் வெற்றி இலக்குடன் ஹரியானா அணி ஆடியது. துவக்க வீரர்கள் அர்ஷ் ரங்கா 17 ரன்னிலும், கேப்டன் அன்கித் குமார் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். பின்வந்தோரில் யாஷ் வர்தன் தலால் 53, நிஷாந்த் சிந்து 31, சமந்த் ஜாக்கர் 38 ரன் எடுத்தனர். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்கங்களில் விக்கெட்டுகளை இழந்தனர். 18.3 ஓவரில் ஹரியானா 193 ரன்னுக்கு ஆல்அவுட்டானது. அதனால், 69 ரன் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்ற ஜார்க்கண்ட் அணி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

இஷான் கிஷண் அபார சதம்

இன்டர்கான்டினன்டல் கால்பந்து

பிஎஸ்ஜி சாம்பியன்

ஷூட்அவுட்டில் வீழ்ந்த பிளெமிங்கோ

கத்தார், டிச. 19: ஃபிபா இன்டர்கான்டினன்டல் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் நேற்று, பிஎஸ்ஜி அணி, 2-1 என்ற கோல் கணக்கில் பிளெமிங்கோ அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

ஃபிபா இன்டர்கான்டினன்டல் கோப்பை கால்பந்தாட்ட போட்டிகள் கடந்த 2024 முதல் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், 32 அணிகள் பங்கேற்று ஆடி வருகின்றன. நடப்பாண்டில் கத்தாரில் அல் ரய்யான் ஸ்டேடியத்தில் நடந்து வரும் இப்போட்டிகளின் இறுதிப் போட்டி நேற்று நடந்தது. அதில், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பாரிஸ் செயின்ட் ஜெர்மெய்ன் (பிஎஸ்ஜி) அணியும், பிளெமிங்கோ அணியும் மோதின. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமநிலையில் இருந்தன. அதையடுத்து, கூடுதலாக 30 நிமிட நேரம் போட்டி நடத்தப்பட்டது. அதில், இரு அணிகளால் கோல் போட முடியாததால், ஷூட்அவுட் முறையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. அதில், 2-1 என்ற கோல் கணக்கில் பிஎஸ்ஜி அபார வெற்றி பெற்று, முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. ஷூட் அவுட்டில், பிஎஸ்ஜி அணியின் ரஷ்யாவை சேர்ந்த கோல்கீப்பர் மாட்வெய் ஷபனோவ், சிறப்பாக செயல்பட்டு 4 கோல்களை தடுத்ததால் இந்த வெற்றி வசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சாத்விக், சிராக் இணை 2வது சுற்றில் வெற்றி

ஹாங்ஸூ, டிச. 19: பிடபிள்யுஎப் உலக டூர் பைனல்ஸ் பேட்மின்டன் போட்டிகள் சீனாவின் ஹாங்ஸூ நகரில் நடந்து வருகின்றன. ஆடவர் இரட்டையர் பிரிவில் நேற்று நடந்த 2வது சுற்று போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ்ரங்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை, இந்தோனேஷியாவின் ஃபஜர் அல்பியான், முகம்மது ஷொகிபுல் ஃபிக்ரி இணையுடன் மோதியது. விறுவிறுப்பாக நடந்த இந்த போட்டியில் சிறப்பாக ஆடிய இந்திய இணை, 21-11, 16, 21, 21-11 என்ற செட் கணக்கில் வெற்றி வாகை சூடி அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்

கதம்பம்

மார்க்கெட்

பிஎஸ்இ	என்எஸ்இ
-78	-3
பாயின்ட் 84,482	பாயின்ட் 25,815

தங்கம் +320 — 1 சவரன் ₹99,520 — 1 கிராம் ₹12,440

வெள்ளி +2,000 — 1 கிலோ ₹2,24,000 — 1 கிராம் ₹224

$ டாலர் ₹90.26

விலை நிலவரம் — பெட்ரோல் ₹100.80 — டீசல் ₹92.39

தீவிரவாதம், பாலியல் வன்கொடுமை குற்றங்களில் சம்மந்தப்பட்ட

விசாரணை கைதிகளுக்கு இனி நிதியுதவி கிடைக்காது

புதுடெல்லி, டிச.19: ஏழை கைதிகளுக்கு ஆதரவளிக்கும் உள்துறை அமைச்சகத்தின் நிதியுதவி திட்டம், தீவிரவாத செயல்கள், வரதட்சணை மரணங்கள், பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றங்களில் விசாரணையை எதிர்கொள்ளும் கைதிகளுக்கு கிடைக்காது என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

நிதி நெருக்கடியால் ஜாமீன் அல்லது அபராதம் செலுத்த முடியாமல் சிறையில் வாடும் ஏழை கைதிகளுக்கு உதவ ஏழை கைதிகள் ஆதரவு திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தியுள்ளது. இதன் படி ஒரு கைதிக்கு ஜாமீன் பெற ரூ.40,000 வரை அபராதம் செலுத்த ரூ.25,000 வரை நிதியுதவி அளிக்கப்படும். ஒன்றிய அரசு மாநிலங்கள், யூனியன் பிரதேசத்துக்கு நிதி அளிக்கிறது. அவர்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில், ஏழை கைதிகள் ஆதரவு திட்டத்தில் திருத்தப்பட்ட வழிக்காட்டுதல்களை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது. அதன் படி தீவிரவாத செயல்கள், வரதட்சணை மரணங்கள், பாலியல் வன்கொடுமை, ஆள் கடத்தல், போக்சோ சட்டத்தின் கீழான கொடூரமான குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இந்த நிதியுதவி திட்டத்தின் பலன்கள் கிடைக்காது என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

முன்னதாக ஊழல் தடுப்பு சட்டம், பணமோசடி தடுப்பு சட்டம், போதை பொருள் கடத்தல், தீவிரவாத தடுப்பு சட்டம் (உபா) போன்ற குற்றங்களில் சம்மந்தப்பட்டவர்களுக்கு நிதியுதவி கிடைக்காது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது மேலும் பல குற்றங்களும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட். Edelweiss Asset Reconstruction
CIN: U67100MH2007PLC174759
எடெல்வீஸ் ஹவுஸ், சிஎஸ்டி சாலை சற்றுத் தொலைவில், கலீனா, மும்பை 400098

பிற்சேர்க்கை IV-A
[விதி 8(6) நிபந்தனைகளைப் பார்க்க]
அசையா சொத்துகளின் ஏலம் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (''விதிகள்'') இன் விதி 8(6) மற்றும் 9 (1) விதிமுறையுடன் படித்தரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், 2002 கீழ் அசையா கடனீட்டுச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இவ்வாறிருக்க, பொது மக்களுக்குப் பொதுவாகவும் ஜாமின்தாரர்(கள்)/ அடமானதாருருக்கு(கள்) குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால் கீழே விவரிக்கப்பட்ட அடமானம் வைக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட அசையாச் சொத்துகளுக்கு தரப்பட்ட நிதி கடன் வசதிகள் ஆனது குறிப்பிடப்பட்ட **இஏஆர்சி–பொறுப்பாட்சி–எஸ்சி–30 (இஏஆர்சி)** பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு உரிமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய உரிமை ஒதுக்கீட்டினை பின்பற்றி, எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி உரிமையீந்தோர் கடமைப் பொறுப்பை ஏற்றுள்ளது. இஏஆர்சி அதன் அதிகாரப்பூர்வமான அதிகாரி (AO) மூலமாக கீழே குறிப்பிடப்பட்ட அடமானம் வைக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட அசையா கடனீட்டுக் சொத்துகளை சுவாதீனம் செய்திருந்தது. அது "உள்ளது உள்ளவித்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" உதவி சாரா அடிப்படையில் மின்–ஏல முகமை M/s இ–புரக்யூர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் (ஆக்சன் டைகர்) மூலமாக அவர்களுடைய இணையதளம்/ இணையை முகப்பு https://edelweissarc.autiontiger.net மூலமாக ஜனவரி 7, 2026 தேதியன்று பகல் 12:00 முதல் 1:00 மணி வரை வரம்பில்லா தலா 5 நிமிடங்கள் நீட்டிப்புடன் Ld. DRT–1, டெல்லி, 09 மே 2018 தேதியிட்ட OA No.241/2015 இறுதி ஆணையின்படி ஆகஸ்ட் 18, 2025 தேதியன்று செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.288,00,73,111/– (ரூபாய் இருநூற்று எண்பத்தெட்டு கோடியே எழுபத்து மூன்றாயிரத்து நூற்று பதினொன்று மட்டும்) அதற்கான மேற்கொண்டு வட்டி மற்றும் பிற செலவினங்கள்/செலவுகளுடன் கடன்தாரர் மற்றும் ஜாமீன்தார்களான நெட் 4 இந்தியா லிமிடெட் (கடன்தாரர்) என்சிஎல்டி கலைப்பு அதன் கலைப்பாளர் மூலம், ஜஸ்ஜித் சிங் சாவ்நி, த/பெ, திரு.அமர்ஜித் சிங் சாவ்நி, பவன்ஜியாத் கவுர் சாவ்நி மற்றும் சுலான் பாய் (இதன் பின்னர் மொத்தமாக ஜாமீன்தாரர்கள் என்று குறிப்பிடப்படுவர்) ஆகியோரிடம் மீட்பதற்காக மின் ஏலம் மூலமாக விற்கப்பட உள்ளது.

ஏலத்துக்கு வைக்கப்படும் கடனீட்டுச் சொத்துகளின் விவரம்

சொத்தின் விவரம்: மனை எண்.12, கேசிஜி கல்லூரி சாலை, காரப்பாக்கம், சென்னையில் உள்ள 0.54 ஏக்கர்கள் திறந்த வெளி நிலத்தொகுப்பில் உள்ள சொத்தின் **எல்லைகள்: இனம் எண்.1: கிழக்கு:** காலி நிலம், **மேற்கு:** மனை எண்.3, **தெற்கு:** மனை எண்.11 மற்றும் **இனம் எண்.II இன் எல்லைகள்: கிழக்கு:** S.No.33/4A, 33/4B, மற்றும் 33/3B இல் உள்ள நிலம், **மேற்கு:** S.Nos.33/8, 6A, மற்றும் 33/33A இல் உள்ள நிலம், **தெற்கு:** S.No.34/7 இல் உள்ள நிலம். அதனுடன் கட்டிடம், கட்டமைப்பு, நிறுவதுல்கள் ஏனையவை தற்போது நிறுவப்படுபவை அல்லது இதற்கு முன் இங்கு நிறுவப்பட்டவை மற்றும் கட்டிடங்கள், அமைப்புகள், நிறுவதுல்கள், வீடுகள், வெளி–வீடுகள், மாளிகைகள், முற்றங்கள், சுற்றுச் சுவர், முற்றம், கிணறுகள், தண்ணீர், தண்ணீர் பாதைகள், சாக்கடைகள், கழிவுநீர், வழிகள், பாதைகள், விளக்குகள்,சுகந்திரம், உரிமைகள், சலுகைகள், பயன்பாடுகள், பயன்கள், கூறப்பட்ட நிலத்தில் உள்ள வசதிகள், பாரம்பரிய உரிமைகள் மற்றும் குடியிருப்புகள் மற்றும் அதன் இப்போதுள்ள அதன் எந்தப் பகுதியும் மற்றும் இனிமேல் உருவாக்கப்படுபவையும், பயன்பாட்டில் உள்ளவை, அனுபவிப்பவை, உரிமை, பயன்கள், சொத்து, கோருதல், மற்றும் குடியிருப்பின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள அனைத்தும் கம்பெனியின் கோரிக்கைக்கு உட்பட்டவை.

நிர்ணயவிலை மற்றும் அதனுடன் மின்–ஏலம் குறித்த விவரங்கள் மற்றும் அசையா சொத்தின் விவரங்கள் பின்வருமாறு:

நிர்ணயவிலை	முன்வைப்புத் தொகை	பார்வையிடும் தேதி	ஏலநாள்
Rs.8,00,00,000/-	Rs.80,00,000/-	02-01-2026	07-01-2026

ஏல உயர்வுத் தொகை	ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்)
ஏலத்தைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதி	ஜனவரி 6, 2026 மாலை 5.00 மணிக்கு முன்பாக
மின் ஏல தளம்	https://edelweissarc.auctiontiger.net
உதவி தளம்	09265562821, 09265562818, 09978591888 arc@auctiontiger.net, support@auctiontiger.net
மின்–ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்	ஜனவரி 7, 2026, (புதன்கிழமை) பகல் 12:00 மணி முதல் 1:00 வரை வரம்பில்லா தலா 5 நிமிடங்கள் நீட்டிப்புடன்

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி இணையதளம் https://www.edelweissarc.in/ காணவும்.** கூடுதல் விவரங்களுக்கு அன்கிட் கோயெல், தொடர்பு எண்.9888566854, மின்னஞ்சல்: Rishabh.jhabak@edelweissarc.in மற்றும் Ankita.goel@edelweissarc.in

நாள்: டிசம்பர் 19, 2025 — **ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி**
இடம்: சென்னை — **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிமிடெடுக்காக**

போராட்டம் காரணமாக மூடப்பட்ட

டாக்கா இந்திய விசா சேவை மையம் மீண்டும் திறப்பு

டாக்கா, டிச.19: டாக்காவில் தற்காலிகமாக மூடப்பட்ட இந்திய விசா சேவை மையம் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டது.

வங்கதேச தலைநகர் டாக்காவில் உள்ள ஜமுனா ஃப்யூச்சர் பார்க் பகுதியில் இந்திய விசா விண்ணப்ப சேவை மையம் இயங்கி வருகிறது.

மேலும், குல்னா, ராஜ்ஷாஹி மற்றும் வடகிழக்கு துறைமுக நகரமான சட்டோகிராம் மற்றும் வடகிழக்கு சில்ஹெட் ஆகிய இடங்களிலும் இந்திய விசா சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை வங்கதேசத்திடம் ஒப்படைக்க வலியுறுத்தி ஜூலை ஒற்றுமை என்ற அமைப்பை சேர்ந்தவர்கள் இந்திய தூதரகத்தை நோக்கி நேற்று முன்தினம் (டிச.17) பேரணி நடத்தினர்.

2 மையங்கள் மூடல்

இதையடுத்து, பாதுகாப்பு காரணங்களுக்கான ஃப்யூச்சர் பார்க் பகுதியில் இந்திய விசா விண்ணப்ப சேவை மையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்நிலையில் ஃப்யூச்சர் பார்க் பகுதியில் இந்திய விசா விண்ணப்ப சேவை மையம் நேற்று முதல் மீண்டும் செயல்பட தொடங்கியது. ஆனால், குல்னா மற்றும் ராஜ்ஷாஹியில் உள்ள விசா சேவை மையங்கள் தற்காலிகமாக மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஏவுகணை சோதனை வங்கக்கடல் பகுதியில் விமானங்கள் பறக்க தடை

புதுடெல்லி, டிச. 19: இந்தியா கடற்படை சார்ந்த ஏவுகணை சோதனையை வரும் 22ம் தேதி முதல் 24ம் தேதி வரை நடத்த உள்ளது. இதையடுத்து ஒரு குறிப்பிட்ட வான் வெளி பகுதியை சிவில் விமான போக்குவரத்தில் இருந்து விடுவிக்க வேண்டி இருக்கும்போது நோடம் (நோட்டீஸ் டூ ஏர் மேன்) அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வங்க கடல் பகுதியில் குறிப்பிட்ட வான்வெளி பகுதிக்குள் எந்த சிவில் விமானமும் பறக்க டிச.22 முதல் 24 வரை அனுமதிக்கப்படாது.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் — GRIHUM Housing Finance Another Aptech Venture

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா டீரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: முதல் தளம், எண்.86/11, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600015.,

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு — சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, அதே அடிப்படையில் **19.01.2026** தேதியன்று மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	வரித்த விக்னங்கள்/ நிர்ணய வழக்குகள் வரித்தது ஏதேனும் (K)
4	**கடன் எண். HL0002810000000503 0183 விக்னேஷ் கணபதி (கடன்தாரர்) கணபதி வேலாயுதம் (உப கடன்தாரர்) லக்ஷ்மி கணபதி**	அறிவிப்பு தேதி: 10.09.2025 சொத்து நிலுவைத் தொகை: 10.09.2025 தேதியின்படி ரூ.11,78,997/– (ரூபாய் பதினொரு லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று ஏழு மட்டும்) மற்றும் அதனுடனான பணத்தை திரும்பிச் செலுத்துவது வரையிலான கூடுதல் வட்டி ஆண்டொன்றுக்கு 15.1%.	கையக	கடை எண்.2 (தெற்கு பகுதி) ஸ்ரீ காயத்ரி கோ–ஆப்ரேட்டிவ் மெகா நகர், வில்லியம்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், S.No.136, லேஅவுட் அனுமதி எண்.Lp/Dtcp No.132/2007 இன் கீழ் தரைத்தளத்தில் 635 ச.அடி